மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) 1972-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் ஓர் புகார் வரப்பெற்றது.

(இ) விஷயம் புலனாய்வில் உள்ளது.

***177 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1973 ஆகஸ்ட் மாதம் கோவையிலிருந்து கேரளாவிற்கு அரிசி கடத்திச் செல்லுவதற்கு போலீசார் எவரேனும் ஈடுபட்டனரா?

(இ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) ஆம்.

(இ) 1973 ஆகஸ்ட் மாதம் 5-ந் தேதியன்று கோவையிலிருந்து கேரளாவிற்கு போலீஸ் லாரியில் அரிசி கடத்திச் செல்ல முயன்ற கேரள போலீஸைச் சேர்ந்த ஒரு உதவி சப்-இன்ஸ்பெக்டர், ஒரு ஹெட்கான்ஸ்டபிள், ஒரு கான்ஸ்டபிள் மற்றும் ஒரு ஹவில்தார் டிரைவர் ஆகியோர் மதுக்கரை அருகே கோவை நகர் காவல் துறைப்பிரிவினரால் கைதுசெய்யப்பட்டு, பின்பு பாலக்காடு டி.எஸ்.பி. யின் ஜாமின் பேரில் விடுவிக்கப்பட்டனர்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: இந்தப் போலீஸார் மீது ஏதாவது வழக்குப் பதிவு செய்யப்பட்டதா? அது எந்த நிலையில் உள்ளது என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: முதலில் வழக்கு தொடர ஏற்பாடு செய்யப்பட்டு அங்குள்ள கேரள தலைமை போலீஸ் அதிகாரிகளும் நம்முடைய தலைமை போலீஸ் அதிகாரிகளும் பேசி, அண்டை மாநிலத்தில் நடக்கிற அதிகாரிகள் செய்த குற்றங்களை அந்த மாநிலத்திலுள்ள தலைமை அதிகாரிகள் அந்த அதிகாரிகள் மேல் குற்றத்தை எடுத்துக்கொண்டு அந்தந்த சர்க்கார் அதைப் பற்றி தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கூறி அந்த வழக்குகள் ராஜி செய்யப்பட்டிருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ்: இது சம்பந்தமாக கேரள மாநில அரசு அதிகாரிகள் மீது ஏதாவது வழக்கு தொடரப்பட்டுள்ளதா? அதன் விவரத்தை அமைச்சர் அவர்கள் கூறுவார்களா?

1974 சனவரி 25]

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: அவர்கள் எடுத்துக் கொள்வார்கள் என்ற நம்பிக்கையிலே விட்டிருக்கிறோம்.

திரு. எம். தேவராசன்: இதைக் காரணமாகக் கொண்டு தமிழ் நாட்டுப் போலீஸாரை வேண்டுமென்றே கேரள போலீஸார் கைது செய்து உள்ளனரா? அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்னவென்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு மன்னை ப. நாராயணசாமி: பாலக்காட்டில் ஒரு குற்ற விசாரணை சம்பந்தமாக கோவை சப்-இன்ஸ்பெக்டர் ஒருவர் அங்குள்ள குற்றவாளியைக் கைது செய்து விசாரணை செய்வதற்காக கேரள எல்லைக்கு சென்றிருந்தார். முதலில் நாம் பிடித்தது 5—8—1973 மதுக்கரை பக்கத்தில் கேரள போலீஸார் அரிசியைக் கடத்திச் சென்ற அந்த வானைப் பிடித்து வழக்கு போட்டோம். அது தான் முதலில் கேட்ட கேள்விக்குப் பதில் சொன்னேன். தலைமை போலீஸ் அதிகாரிகள் அவரவர்கள் டிபார்ட்மெண்டு அதிகாரிகள் மீது உள்ள வழக்குகளை எடுத்துக் கொள்வார்கள் என்று நம்முடைய ஐ.ஜி. அவர்கள் விட்டிருக்கிறார்கள். அதற்குப் பிறகு 10 நாள் கழித்து நம்முடைய போலீஸ் அங்கே சென்று வேறு ஒரு திருட்டு வழக்கில் ஒருவரைப் பிடித்து விசாரணை நடத்தியபொழுது, அங்கு இருக்கிற போலீஸாரும், மற்ற போலீஸாரும் சேர்ந்து நம்முடைய அதிகாரிகளைப் பிடித்து, அவர்கள் மீது அவர்கள் அங்கிருந்து அரிசி கடத்தினார்கள் என்று இரண்டு மூட்டை அரிசியை நமது வேனில் வைத்து. அப்படி வழக்குப் போட்டார்கள். அவர்கள் அதையும் இன்னும் பரிசீலித்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு மேல் என்ன நடவடிக்கை எடுப்பது என்பதை அவர்கள் தான் சொல்ல வேண்டும்.

திரு. எம். ஏ. லத்தீப்: குறிப்பிட்ட போலீஸ் அதிகாரிகள் தம் சொந்தத்துக்காக, தம்முடைய சொந்த லாபத்துக்காக அரிசி கடத்தியிருக்கிறார்களா? அல்லது தமிழ் நாட்டில் இருக்கிற வேறு இதர வியாபாரிகள் சார்பாக ஏஜெண்டாக இருந்து அரிசி கடத்தியிருக்கிறார்களா? இதைச் செய்வதற்கு உதவியாக இருந்தவர் யார்? அப்படியிருந்தால் தமிழ் நாட்டிலிருந்து வியாபாரி யார் யார், அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? வியாபாரிக்கு உடந்தையாக இருந்து, ஏஜெண்டாக இருந்து போலீஸார் இந்தக் காரியங்களைச் செய்தார்களா? இது விசாரணை செய்யப்பட்டதா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : வியாபாரிகளும் இதோடு தொடர்பு கொண்டிருந்தார்களா, இல்லையா என்பது தெரியவில்லை. மதுக்கரை அருகே கேரள போலீஸைச் சேர்ந்த சங்கரன்குட்டி நாயர்—உதவி சப் இன்ஸ்பெக்டர், நாராயணன் நாயர்—ஹவில்தார், சந்திரசேகர வாரியார்—தலைமைக் காவலர், பேபி பால் ராஜ்—காவலர் ஆகியோர் ஷண்முகா ரைஸ் மில்லி லிருந்து 8 மூட்டை அரிசி, 2 சிறிய மூட்டை அரிசி இவைகளை வாங்கி ஏற்றிக்கொண்டு போகிறார்கள் என்ற தகவல் கிடைத்தது, உடனே நம்முடைய போலீஸ் அதிகாரிகள் சென்று அவர்களைப் பிடித்திருக்கிறார்கள். அங்கிருந்த போலீஸ் டெப்யூடி சூப்பரின் டெண்டெண்டு அவர்களை ஜாமீனில் விடுத்திருக்கிறார். சொந்த உபயோகத்திற்கு வாங்கினார்களா, அல்லது இம்மாதிரி எப்பொழுதும் செய்கிறார்களா என்ற நிலைமை பரிசீலனையில் இல்லை.

போக்குவரத்து நிறுவனங்களுக்கு நிதி உதவி

***178 வினா—திரு. என். டென்னிஸ் :** மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநிலத்திலுள்ள போக்குவரத்து நிறுவனங்கள், மத்திய அரசால் நிறுவப்பட்டுள்ள போக்குவரத்து நிதிக் கழகத்தை, நிதி உதவி வேண்டி, 1972-73-ம் ஆண்டுகளில் அணுகி யுள்ளனவா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

சென்னை-போந்தவாக்கம் பேருந்து வழித்தடம்

***179 வினா—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு போக்கு வரத்துக் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையிலிருந்து போந்தவாக்கம் செல்லும் வழித் தடம் எண் 111-பி பேருந்தினை சூரப்பூண்டி, சாணாப்புத்தூர் கிராமங்களின் வழியே திருப்பிவிடும் செயற்குறிப்பு ஆய்வில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், இது எப்போது நிறைவேற்றப்படும் ?